# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம், புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
தொலைபேசி எண் 24312841.

**வழக்கு எண். 11558/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள். 25.9. 2009</u> (திருவண்ணாமலை)**

**முன்னிலை** — **திரு தி சீனிவாசன், எம்.எஸ்சி.**
**மாநில தகவல் ஆணையர்.**

**மனுதாரர்:** — திரு . P. ரவி
உள்ளி கிராமம் & வளத்தூர் அஞ்சல்
குடியாத்தம் தாலுகா, வேலூர் மாவட்டம்

**பொது அதிகார அமைப்பு:** — பொதுத் தகவல் அலுவலர்
காவல் துறை ஆய்வாளர்,
குடியாத்தம் , வேலூர் மாவட்டம்

மனுதாரர் திரு . P. ரவியும், பொது அதிகார அமைப்பின் சார்பாக குடியாத்தம் காவல் துறை ஆய்வாளரும் இன்று (25.9.09) இவ்வாணையத்தால் திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட விசார**ணைக்கு வந்திருந்தனர்.**

மனுதாரர் 20.4.09 அன்று 13 இனங்களில் 48 மணி நேரத்திற்குள் தகவல் கேட்டு மனு அனுப்பி உள்ளார். மனுதாரருக்கு உரிய தகவல்கள் கிடைக்காததால் இவ்வாணையத்திற்கு 4.5..09 அன்று மேல் முறையீடு செய்துள்ள மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசராணையில் மனுதாரர் தகவல் ஏதும் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவித்தார். மனுதாரரிடம் குறிப்பிட்ட 48 மணி நேரத்திற்குள் தகவல் கேட்டு மனு அனுப்பி உள்ளதைப் பற்றி விசாரிக்கப்பட்டது. மேலும் கேட்கப்பட்ட தகவலானது

ஒருவருடைய உயிர் அல்லது சுதந்திரம் தொடர்புடையதாக இருந்தால் மட்டுமே மனுதாரருக்கு 48 மணி நேரத்திற்குள் அந்தத் தகவல் வழங்கப்படும் என்பதை மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் 2007 ஆம் ஆண்டு இறந்த தன் தாயாரின் இறப்பு குறித்து 20.4.09 அன்று தகவல் கேட்டு உள்ளார். மனுதாரர் கேட்ட தகவல்கள் வழங்கப்பட வில்லை என்று தெரிவித்தார். இது பற்றி விசாரிக்கப்பட்டது. பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கேட்ட தகவல்கள் வழங்கப்படாதது குறித்து விசாரரணையில் ஏதும் தெரிவிக்கயியலவில்லை. மனுதாரரின் குறிப்பிட்ட மனு குடியாத்தம் காவல் துறை அலுவலகத்தில் ஒரு குறி.ப்பிட்ட நபரால் அஞ்சல் ஒப்புகை அட்டையில் கையொப்பமிட்டு பெறப்பட்டுள்ளது. மனுதாரருக்கு என்தவித தகவலும் வழங்கப்படாததால் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது. மனுதாரரின் மனுவில் 7 இனங்களுக்கு மட்டுமே தகவல்கள் கேட்கப்பபடடுள்ளது மற்ற 5 இனங்களில் என்தவித தகவல்களும் கேட்கப்படவில்லை என்று இவ்வாணையம் முடிவு செய்கிறது.

மனுதாரர் கேட்ட உரிய தகவல்களை 7 இனங்களுக்கும் இவ்வாணை பெறப்பட்ட 15 தினங்களுக்குள் அளித்து அதன் விவரத்தினை ஆணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர் / குடியாத்தம் காவல் துறை ஆய்வாளருக்கு ஆணையிடப்படுகிறது.

மனுதாரரின் 20.4.09 தேதியிட்ட மனுவிற்கு உரிய தகவல்களை இது வரை வழங்காததற்கு சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் பிரிவு 20 (1) ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு விளக்கம் கேட்டு அவ்விளக்கத்தினை இவ்வாணயத்திற்கு இவ்வாணை கிடைத்த 30 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர், வேலூர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**மாநில தகவல் ஆணையம்**

**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 15.9.09**
ஆணையத்தின் ஆணைப்படி

உதவிப் பதிவாளர்

மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்,
வேலூர்

பொதுத் தகவல் அலுவலர்
காவல் துறை ஆய்வாளர்,

குடியாத்தம் ,
வேலூர் மாவட்டம்

திரு . P. ரவி
உள்ளி கிராமம் & வளத்தூர் அஞ்சல்
குடியாத்தம் தாலுகா, வேலூர் மாவட்டம்